செ.வெ.எண் : 05 / செப்டம்பர் நாள் : 04.09.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மூலம் நடைபெற்ற அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கான நேர்முகத் தேர்வு

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கில் இன்று (04.09.2017) சமூகநல பாதுகாப்புத் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மூலம் நடைபெற்ற அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கான நேர்முகத் தேர்வினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள 269 அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களுக்கும் 227 குறு அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களுக்கும் 396 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை இனச்சுழற்சி முறையில் நியமனம் செய்து நிரப்புவதற்காக நேர்முகத் தேர்வு நடைபெறுகின்றது.

இப்பணியிடங்களைப் பொறுத்தவரை மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து அங்கன்வாடி பணியாளர் பணியிடங்களுக்கு 2,246 மகளிரும், குறு அங்கான்வாடிப் பணியாளர் பணியிடங்களுக்காக 1,236 மகளிரும், அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களுக்காக 1498 மகளிரும் என மொத்தம் 4980 மகளிர்கள் விண்ணப்பித்துள்ளனர். இந்நேர்முகத் தேர்வில் விண்ணப்பித்துள்ள நபர்களில் தகுதியான பணியாளர்களை தேர்வு செய்வதற்கான தகுதி அடிப்படை மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் நேர்முகத் தேர்வானது இன்று (04.09.2017) மற்றும் நாளை (05.09.2017) என இரண்டு நாட்களுக்கு காலை மற்றும் பிற்பகல் என இரண்டு அமர்வுகளாக (Session) நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வில் பங்கேற்றுள்ள மகளிருக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, அவசர கால மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும், நேர்முகத் தேர்வு அமைதியான முறையில் நடைபெற்று வருகின்றது எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு.வ.முருகானந்தம், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.குணசேகரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளாச்சி திட்ட அலுவலர் திருமதி.கிருஷ்ணவேணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி. என்.சுஜிபிரமிளா, மாவட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் நியமன அலுவலர் மரு.ஜெ.சுபாஷ்சந்திரபோஸ் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**